தமிழீழத் தேசிய மாவீரர் நாள் - 2025

இன்று மாவீரர் நாள். தமிழின விடுதலைக்காக தம்மையே ஆகுதியாக்கிய மாவீரச் செல்வங்களை போற்றித் துதிக்கும் புனித நாள்.
தமிழீழ மண் மீட்டு, தமிழரின் உரிமையை நிலைநாட்ட போர்க்களம் புகுந்த வீரர்களை, அவர்களின் வீர வரலாற்றை உணர்ந்துருகும் நன்நாள்.

மாவீரர்நாள் ஆண்டாண்டு காலம் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழினத்தை தலைநிமிர்த்திய சிரஞ்சீவிகளை வணங்கும் புனிதநாள்.

நம் கண்முன்னே பல களம் கண்டு சாதனைகளின் சொந்தக்காரர்களாகத் திகழ்ந்தமறவர்களை எம் நெஞ்சிலே நிறுத்தும் கார்த்திகை நாள்.

விடுதலை வேட்கையுடன் மண்ணுக்குள் உறங்கும் வீரர்கள், எம் மனங்களில் வாசம் செய்து, இலட்சியத்தை விதைக்கும் உறுதியின் திருநாள்.
தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலை உளமார ஏற்று, தமிழின விடுதலைக்கு உரமான வீரர்களை துதிக்கும் உன்னத நாள்.

தமிழீழ மண் பல சரித்திரங்களை தன்னுள் கொண்டுள்ளது. இவ் உலகின் விடுதலை வேண்டிப் போராடும் இனங்களுக்கெல்லாம் புது வழியை கோட்பாடாக உருவாக்கி தந்த மண், தமிழீழம்.

தான் கொண்ட இலட்சியத்தின் வழிநின்ற தலைவனையும் அவர் கட்டளையை சிரம் மேற்கொண்டு வழிநடந்த வேங்கைகளையும் தொழுதுருகும் அற்புத நாள் இன்று.

தமிழினம்,
தமிழீழ விடுதலைப் போர் மௌனித்து, இரண்டு தசாப்தங்களை எட்டும் நிலையில், தமிழினத்தின் தானைத் தலைவனையும் மாவீரர்களின் எண்ணங்களையும் மனதில் இருத்தி இலட்சிய வழி செல்கிறது.

தமிழின விடுதலை என்பது ஓரிரு நாட்களில் அடைக்கூடிய அற்புதத்தை கொண்டதல்ல. கால ஓட்டத்தில் அறிவழிகளை ஆயுதமாக்கி முன்னேறும் இனமே தம் இலட்சியத்தை எட்டும் என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களுக்கு செயல் வடிவமாய் தமிழினம் தன்னை புடம் போட்டு நகர்கின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் தான் வரித்துக்கொண்ட இலட்சித்திற்காக எவ்வித சமரசங்களுக்கும் இடம் கொடாமல் இறுதிவரை போரிட்டு வீரச்சாவை அணைத்துக்கொண்டவர்.

விடுதலைப் போராட்டத்தில் ஆயிரமாயிரம் வேங்கைகளை தனது பிள்ளைகளாய் போற்றி காத்தவர். களம் நோக்கி விரைந்த வேங்கைகளை 'நீங்கள் முன்னே போங்கள் நான் பின்னே வருகிறேன்' என்ற சத்தியத்தின் வழி நின்றவர். தன்னையும் தன் குடும்பத்தையும் எம் இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்த மாண்பை உடையவர்.

உலக நாடுகள் ஒன்றாகி நின்ற போதும் போராடும் இனங்களுக்காக தமிழின உரிமையை விட்டுக்கொடாமல் நந்திக்கடலோரம் வரை சென்று 'அடிபணியாமை' என்ற தத்துவத்தை விதைத்து சென்றவர்.

இறுதி வரை நெஞ்சுரத்துடன் நின்று போரிட்டு மாவீரர்களுடன் மாவீ ரராக கலந்த ஒப்பற்ற தலைவனையும் அவர் மாண்பையும் போற்றி காக்க வேண்டும்.

இவ் வரலாற்றில் கலந்துணர்ந்து அக்காலத்தின் எச்சங்களாக நாம் வாழ்ந்து வருகின்றோம்.

தனது வரலாற்றை தெளிவாக விட்டுச் செல்லும் இனத்தின் தொடர்ச்சியே மீண்டெழும்.

வரலாற்று படிப்பினையே எம் இளம் சமூதாயத்தை வழிநடத்தி மாறிவரும் உலக போக்கை கையாள உந்து சக்தியாக அமையும்.

நாம் கற்பனைகளை உண்மயாக்கும் தொழில் நுற்ப உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

அசுர வேகம் கொண்டு நிற்கும் இம்மாற்றங்களில் இருந்து எமது வரலாற்றை பாதுகாத்து அடுத்த சந்ததியிடம் கையளிக்கும் பெரும் பொறுப்பு எம்மிடம் உள்ளது.

சிங்கள பேரினவாதம் மகாவம்ச மனநிலையில் இருந்து மாற வேண்டும் என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணம் கற்பனைக் கதைகளும் கதை உருவாக்கங்களுமே இன்றைய இனங்களுக்கு இடையான பிரிவினைகளின் மூலமாக உள்ளது என்பதை உணர்த்துகின்றது.
அம் மனநிலைகளே மக்களை உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் அடிமைகள் என்ற எண்ண ஓட்டங்களுக்குள் சிக்க வைத்து சீரழிக்கிறது.

இளம் சமூதாயத்திடம் கையளிக்கப்பட்ட எமது விடுதலை நோக்கிய பெரும் பொறுப்பை வெறும் கற்பனைக் கதைகளுடனோ, தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களுக்கும் கொள்கைக்கும் மாறான கருத்துக்களுடனோ கடத்துவதை தமிழினம் என்றும் ஏற்றுக் கொள்ளாது.

தமிழினம் கண்ட உண்மைகள் தியாகங்கள் அவ் இனத்தின் முன்னே சிதைந்து போவதையும் ஏற்றுக்கொள்ளாது.

சிங்கள பேரினவாதமும் அதன் ஒத்தோடிகளும் தமிழின வரலாற்றை மடைமாற்றும் செயற்திட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வருவது யாவரும் அறிந்ததே.

அதற்கு தற்போதைய ஜேவிபி அரசாங்கமும் விதிவிலக்கல்ல.
ஆடசிக்கு வருமுன்

- தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை
- இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் நிலங்களை மீள ஒப்படைத்தல்

- தமிழ் மொழி உரிமையை உறுதிப்படுத்துதல்
- அரசியல் அதிகாரப் பகிர்வு

தொடர்பாக வாக்குறுதிகளை வெற்றி வழகிய இந்த அரசு, தொடர்ந்தும் பவுத்த மேலாதிக்க சிந்தனை சக்தியிலேயே மூழ்கி நிற்கிறது.

பேரினவாத சித்தாந்த மாயைக்குள் எமது சமூதாயம் தள்ளப்படுவதையோ ஏமாற்றப் படுவதையோ தமிழினம் வேடிக்கை பார்க்க முடியாது.

தமிழின விடுதலைப் போர் மௌனித்து ஆண்டுகள் பல கடந்தாலும் தாயகத்தில் சிங்கள ஆக்கிரமிப்பின் காட்சிகள் மாறவில்லை.

அன்பே உருவான அகிம்சையின் வடிவான புத்த பகவானை ஆக்கிரமிப்பின் குறியிடாக்கி சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொள்ளும் சதிகளை இவ் உலகம் வேடிக்கை பார்த்து நிற்கின்றது. தமிழரின் பண்பாட்டு அம்சங்கள் அழிக்கப்பட்டு பாரம்பரிய நிலங்கள் சிங்கள அரசால் விழுங்கப்படுவதை ஒரு நிகழ்ச்சியாக தமிழினம் கடந்துவிட முடியாது.

போரின் வடுக்களை சுமந்து நிற்கும் இனத்தை சமூக சீரழிவிற்குள்ளும் சிக்க வைக்கும் சிங்கள அரசின் தந்திரோபாயத்தை தமிழினம் ஒற்றுமையுடன் எதிர்கொண்டு மீண்டேழ வேண்டும்.

இன்றைய உலக ஒழுங்கில் நாம் எதிர்பார்ப்பதற்கு மாறான பல விநோத நகர்வுகளை அவதானிக்கின்றோம்.

நில ஆக்கிரமிப்புகளும் பொருளாதார ஆக்கிரமிப்புக்களும் தொடர்கின்றன. வெற்றி தோல்விகள் அற்ற போர்கள் பெரும் பொருளாதாரத்தை சிதைத்து நிற்கின்றது.

உலக ஒழுங்கு, போர்களுக்கும் இனப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் புது வழிமுறைகளுக்குள் சென்றுகொண்டிருக்கின்றது.

நாடுகளின் வரைபுகளும் எல்லைக் கோடுகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. தனவந்த நாடுகள் பொருளாதார பின்னடைவுகளிலும் வளர்ந்து வரும் நாடுகள் தொழில்நுற்ப அறிவில் அசுர போக்கிலும் செல்வதை நாம் காண்கின்றோம்.

இம் மாற்றங்கள் எம் தமிழின தேசிய விடுதலை மீதான நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது. இச் அச்சாதக பாதகங்களை உள்வாங்கி எமது இனத்திற்கான விடுதலையை பெற்றெடுக்கும் நிலைக்குள் எம்மை தயார்படுத்தி வைத்திருப்பது காலத்தின் தேவையாகின்றது.

எமது இளைய சமூதாயம் இப் புதிய மாற்றங்களை, மாறி வரும் உலக ஒழுங்கை, தமது அறிவாயுதம் கொண்டு எதிர்கொள்ளும் என்ற தலைவரின் உயரிய சிந்தனைக்கான காலம் கனிந்து கொண்டிருக்கின்றது.

தமிழீழ மக்களாகிய நாம் சுமக்கும் விடுதலை எனும் பெரும் கனவை எமது இளம் சமூதாயத்திடம் கையளிப்பதற்கு முன்னர்,

சரியான வரலாற்றை அவர்களுக்கு புகட்டுவதே அவர்களின் விடுதலை நோக்கி பாதையை இலகுபடுத்தி அவர்களின் விவேகத்திற்கு வித்திடும்.

இவ் யதார்த்தத்தை நாம் புரிந்து செயற்படுவதே இந்நாளில் நாம் மாவீரர்களுக்கும் தமிழீழத் தேசியத் தலைவருக்கும் வழங்கும் உறுதிமொழியாகும்.

எனவே தீய சக்திகளின் எண்ணங்களுக்கு துணைபோகாமல் மாவீரர்களின் தியாகங்களையும் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத்தலையும் எமது மனங்களில் உள்வாங்கி எத்தடை வரினும் துவண்டு போகாமல் எம் விடுதலை நோக்கிய பாதையில் தொடர்ந்து செல்வோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.

‘தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்‘